## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.80/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அங்கம்மாள் | மதம் | : இந்து |
| க/பெ | : ராஜாபாதர் | ஜாதி | : -- |
| வயது | : 64 | கிராமம் | : தியாகராயநகர் |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : சென்னை |

**11.12.2024**

**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

**1.** நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்குத் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 04.07.1973ம் தேதியிட்டு முனுசாமி வகையறா சிவா என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 06.12.1973ம் தேதியிட்டு சிவா எனக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.1ல் என் பெயருக்குள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 13.04.2005ம் தேதியிட்ட வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 1427ம் பசலிக்கு கொடுக்கப்பட்ட அடங்கல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அடங்கல் வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 01.01.1964ம் தேதி முதல் 31.12.1978 வரையிலான வில்லங்க சான்று சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

01.07.1978ம் தேதி முதல் 31.12.1986 வரையிலான வில்லங்க சான்று சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 01.01.1987ம் தேதி முதல் 07.08.2017 வரையிலான வில்லங்க சான்று சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. 01.07.1978ம் தேதி முதல் 10.02.2021 வரையிலான வில்லங்க சான்று இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 06.08.2021ம் தேதியிட்ட நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவு, திருவள்ளூர் உதவி ஆய்வாளரின் விசாரணை அறிக்கை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(விசாரணை அறிக்கை வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 21.08.2017ம் தேதியிட்டு திருவேலங்காடு சார்பதிவாளர் எனக்கு அனுப்பிய கடிதம் மற்றும் ரசீது தாக்கல் செய்கிறேன். **(கடிதம் மற்றும் ரசீது வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)